# யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவிய வரைதலும் சவால்களும்

**ஆ.காங்கேயன்**
*ஓவியத்துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

மெய்யுரு ஓவியம் என்பது ஒருவருடைய உருவப்படத்தை மட்டும் வெளிப்படுத்தாமல் அவருடைய ஆளுமை, அந்தஸ்து மற்றும் அவருடைய குண இயல்பு போன்றவற்றினை வெளிப்படுத்துவதோடு அந்த ஓவியத்தை வரைந்த ஓவியரின் கலைப்பார்வையினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையானது யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவியர்களை ஆராய்வதோடு மட்டுமல்லாமல் யாழ்ப்பாணச் சமூகத்தில் மெய்யுரு ஓவியம் வரைவதில் காணப்படுகின்ற சவால்களையும் முன்வைக்கின்றது. கனகசபாபதி, இராசரத்தினம் மற்றும் ஆசை ராசையா போன்ற திறமை மிக்க கலைஞர்கள் யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவியத்தின் வரலாற்றிற்கு வித்திட்டனர். தென்னிலங்கைக் கலைகளுக்கு நிகராகவும் அதற்கு மேலாகவும் கலை வளர்ச்சியில் யாழ்ப்பாணம் உயர்ந்து காணப்பட்டது. இருப்பினும் யாழ்ப்பணத்தில் பல காரணிகள் கலை பற்றிய பார்வையைப் பின்நோக்கிக் கொண்டு செல்கின்றன. ஒரு விரிவான ஆய்வின் மூலம், யாழ்ப்பாணத்தில் மெய்யுரு ஓவியத்தின் தற்போதைய நிலையைப் புரிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இந்த மெய்யுரு ஓவியக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. யாழ்ப்பாணச் சமூகத்தில் கலை பற்றிய பார்வை குறைந்து காணப்பட்டமை, கலைஞனின் திறன் மற்றும் வெளிப்பாடு குறைந்து செல்லுதல், போதுமான நிதி ஆதரவு இல்லாமை, முழுநேர ஓவியராக வாழ்வதில் உள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பாரம்பரிய நடைமுறைகளில் நவீன தொழில்நுட்பத்தின் தாக்கம் ஆகியவை முக்கிய தடைக்கல்லாக வரையறுக்கப்படுகின்றது. உள்ளூர்க் கலைஞர்கள், கலை உற்பத்திகள் விற்பனையாளர்கள், கலாசார வல்லுநர்களுடன் நேர்காணல்கள், மற்றும் ஏற்கனவே உள்ள நூல்கள், ஓவியங்களை ஆய்வு செய்தல் போன்ற பல்வேறு முறைகளில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. பல கலைஞர்கள் சமகாலத் தழுவல்கள் மற்றும் பொருளாதார சாவால்களுக்கும் ஏற்ப மெய்யுரு ஓவியங்களை வரைகின்றனர். சிலர் பாரம்பரிய நுட்பங்களை பாதுகாப்பதில் முக்கியம் செலுத்துகின்றனர் என்பதைக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன. கூடுதலாக, யாழ்ப்பாணத்தின் சமூக மற்றும் அரசியல் அமைப்பு, உள்நாட்டு மோதல்கள் மற்றும் மறுகட்டமைப்பு ஆகிய விடயங்கள் மெய்யுரு ஓவியர்களின் கலை முயற்சிகளை மேலும் சிக்கலாக்குகிறது. அத்துடன் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக டிஜிட்டல் மெய்யுரு வரைதல் போன்றவை இதிலடங்குகின்றன. இதனை நிவர்த்தி செய்வதற்கு, யாழ்ப்பாணச் சமூகத்தினரின் கலை பற்றிய புரிந்துணர்வை மேம்படுத்துவதுடன் மெய்யுரு ஓவியரின் கலைத்திறனை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்ட பன்முகத் தன்மையினை இவ்வாய்வு முன்மொழிகிறது. கலைஞர்கள் தங்கள் படைப்புகளைக் காட்சிப்படுத்துவதற்கான தளங்களை உருவாக்குதல் அதாவது கண்காட்சிக்கூடங்கள் மற்றும் நிகழ்நிலை (*Online*) போன்றவை, விழிப்புணர்வு மற்றும் யாழ்ப்பாணத்தில் மெய்யுரு ஓவியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் கல்வித் திட்டங்களை நிறுவுதல் மற்றும் பட்டறைகள் நடத்துதல் ஆகியவை அடங்கும். இறுதியில், இந்த ஆய்வு யாழ்ப்பாணத்தின் கலைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும், வளர்ச்சியடையச் செய்வதற்கும், மெய்யுரு ஓவியர்களுக்கு அவர்களின் சவால்களை சமாளிப்பதற்கும்,

*அதிக அங்கீகாரத்தை அடைவதற்கும் ஆதரவளிக்க முயல்கிறது. யாழ்ப்பாணச் சமூகத்தினருக்கு மெய்யுரு ஓவியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் வளமான கலை மரபுகள் தொடர்ந்து செழித்து வருவதையும், எதிர்கால சந்ததியினருக்கு ஊக்கமளிப்பதையும் உறுதி செய்ய இந்த ஆய்வு விளைகிறது.*

***திறவுச் சொற்கள்*** *- மெய்யுரு ஓவியர்கள், மெய்யுரு ஓவியங்கள், அரசியல், சந்தைப்படுத்தல்.*